## 20-10-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : லோகாயதவாதமும் எதிர்ச்சிந்தனைகளும்.
## தொடக்கவுரையாடல் : சி. இதயராஜா

1. மெய்ஞ்ஞானம் என்றால் என்ன?

எது மெய்?

கடவுளா, ஆன்மாவா, கருத்தா அல்லது பொருளா, வாழ்வா? இந்த அடிப்படைக் கேள்வியை ஆராய்ந்து எது மூலம், எதுமுதல் என்று தெரிவதுதான் மெய்ஞ்ஞானம் எனப்படுகிறது.

ஒரு செயல்துணிவுள்ள ஊழியனோ, தொழிலாளியோ பிசகில்லாமல் புரட்சிக்குரிய காரியங்களை செய்துகொண்டு போகத் தேவைப்படுவது யாது?

விசயங்களை சரிவர ஆய்ந்தறிந்து அதன் அடிப்படையில் தர்க்கம் செய்து முடிவுக்கு வருவதற்கு ஒரு சரியான ஆய்வு முறை அவனுக்கு இருக்க வேண்டும். வரட்டுத் தத்துவமும் குருட்டுச் சூத்திரமும் தேவையில்லை.

என்றைக்கும் ஒரே மாதிரியில்லாமல் மாறிக்கொண்டிருக்கும் விசயங்களையும் நிலைமைகளையும் பார்த்து, அலசி ஆராயும்முறை தேவை. தத்துவத்தை நடைமுறையில் இருந்து பிரிக்காத ஒரு ஆய்வுமுறை தான் வேண்டியது. அதுவே இயங்கியல் பொருள்முதல்வாதம் என்ற மெய்யியல்.

2. பொருள்முதல்வாதம் என்பது என்ன?

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதே பொருள்முதல்வாதம் (லோகாயுதம்) என்றும் இலட்சியம் இல்லாத, அதற்காய்ப் போராடாத விலங்கு வாழ்க்கை என்றும் மதவாதிகள் சொல்வது பச்சைப்பொய்.

பொருள்முதல்வாதமானது மிகவும் பொதுவான உலகப் பிரச்சனைக்கு மெய்யியல் விளக்கம் தர முற்படுகிறது. ஆனால் தொடக்காலத்தில் இருந்து இயற்கைக்கும், பிரபஞ்சத்திற்கும் அளிக்கும் விளக்கம் முன்னேறிக்கொண்டே இருக்கிறது. அதற்கு காரணம் புதிய புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் அதிகரிப்பதே.

அறியாமையின் வரலாற்று வளர்ச்சிப்பாதையில் மதங்களின் தோற்றம் சாத்தியமானது. அம்மதங்கள் உலகை விளக்க விரும்புகின்றன. ஆனால் அவை இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைக் கொண்டு விளக்க முற்படுகின்றன. அவை விஞ்ஞானத்திற்கு முரணான விளக்கங்களையே தருகின்றன.

இச்சூழலில் விஞ்ஞானம் வளர வளர விஞ்ஞானப் பரிசோதனைகளில் இருந்து பௌதீக விபரங்கள் மேலும் மேலும் கிடைக்க அவற்றை கொண்டு பிரபஞ்சத்தை விளக்க விஞ்ஞானிகள் முயற்சிக்கிறார்கள்.

பிரபஞ்சத்தைப் பற்றிய விஞ்ஞான ரீதியான விளக்கத்தை தருவதே (லோகாயுதவாதம் என்று சொல்லப்பட்ட) பொருள்முதல்வாதம் .

3. பொருள்முதல்வாதிகளின் கோட்பாடுகள் என்ன?

• வாழ்நிலைக்கும் சிந்தனைக்கும் இடையே, பொருளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே ஒரு குறிபிட்ட உறவு உண்டு என்பது

• வாழ்நிலைதான், பொருள்தான் மூல ஆதாரம் அம்சம், அதுதான் முதலில் இருந்தது; ஆன்மா என்பதும் மனம் என்பதும் இரண்டாம் பட்சமானது.

• பொருள் சார்ந்துதான் ஆன்மா இருக்கிறது.

• பிரபஞ்சத்தையும் பொருளையும் படைத்தது கடவுள் அல்ல; மனம் அல்ல; அதற்கு மாறாக இந்தப்பிரபஞ்சமும் பொருளும் இயற்கையும்தான் மனத்தைப் படைத்தது.

• மனம் என்பது பொருளின் அதியுன்னதமான ஒரு படைப்பேயொழிய வேறில்லை" - எங்கல்ஸ்

மிகுதி அடுத்த பக்கம்..

### அடுத்து வரும் தலைப்புக்கள்

JVP அமைப்பினை விளங்கிக்கொள்ளல்
27-10-2011 | சி. கா. செந்திவேல்

OccupyWallStreet
03-10-2011 | விஜயகுமார் சுகுமாரன்



30/10

**சுபத்திரன் (ஏப்ரல் 16, 1935 - அக்டோபர் 30, 1979, மட்டக்களப்பு)**

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில், தன்னை முற்போக்கு இலக்கிய கவிஞராக அடையாளப்படுத்திக்கொண்ட கவிஞர் இவர்.
சுபத்திரனுடைய இலக்கிய ஆளுமை அவரை மட்டக்களப்பின் முக்கிய கவிஞர்களில் ஒருவராக ஆக்கியது. சாதி, ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்து அதன் போராட்டங்களில் தானும் ஒரு பங்காளியாக நின்று உழைத்தார்.
இந்தியாவில் இருந்து மட்டக்களப்பில் தங்கியிருந்த கிருஷ்ணர் குட்டியின் நட்பு சுபத்திரனுக்குக் கிடைத்தது. அவரின் உந்துதலால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து மார்க்சிய சித்தாந்தங்களின் மூலம் அடக்குமுறைக்கெதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வைப் பெற்றார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

## லோகாயதவாதமும் எதிர்ச்சிந்தனைகளும்

*முன்பக்கத் தொடர்ச்சி..*

• சிந்தனை என்பது மூளையின் விளைபொருள்

• "நமது உணர்வும் சிந்தனையும் புலனுக்கு அப்பாற்பட்டதாக தோன்றினாலும் அவையெல்லாம் மூளை என்கிற பொருளாலான உடல் உறுப்பின் விளைபொருளாகும்" - எங்கல்ஸ்

4. இரட்டை வாழ்நிலை?

ஆதிமனிதர்களுக்கு தம்மைப்பற்றியும் உலகம் பற்றியும் பூரண தெளிவின்மை நிலியமையால் தமக்கு ஆச்சரியமாகப் பட்டவற்றை மனிதனுக்கும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட சக்திகளால் உண்டாக்கப்படவை என்று அவர்கள் கருதினார்கள். அவர்கள் கனவு காணும்போது அதில் இறந்த நபர்களும் உயிர்பெற்று வாழ்வதைக் கண்டார்கள். இந்தக் கனவுகள் அவர்களுடைய கற்பனைகளை தூண்டின அந்தக் கற்பனைகளைக் கொண்டு ஒவ்வொருவருக்கும் இரட்டை வாழ்க்கை உண்டு எனவும் முடிவுகட்டினார்கள். இக்கருத்து அவர்களைக் கலக்கம் அடையச்செய்தது. எனவே தங்களுடைய சிந்தனைகளும், புலனுணர்ச்சி மூலமான அனுபவங்களும் தங்களுடைய உடம்பின் நடவடிக்கைகள் அல்ல, அவை எல்லாம் ஒரு சுயம்புவான ஆத்மாவால் நடைபெறுகின்றன, அது உடம்புக்குள்ளே குடிகொண்டிருக்கிறது இறக்கும்போது உடலை விட்டு பிரிந்து போகின்றது என்றெல்லாம் அவர்கள் கற்பனை செய்துகொண்டார்கள்.

கலந்துரையாடலில் திரு.ராஜரட்ணம் கூறியவை

இன்றைய பொருள்முதல்வாதம் இயங்கியல் பொருள்முதல்வாதம் என அழைக்கபடுகிறது. மாக்சியத்துக்கு முன்பு பல பொருள்முதல்வாத தத்துவங்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றே லோகாயதவாதமாகும்.

லோகாயுதத்தின் பிதாமகர் பிரகஸ்பதி ஆவார்.

லோகாயுதம் மக்களின் வாழ்க்கைத் தத்துவம் என அழைக்கப்படுகிறது. வான் உலகம், மேல் உலகம்,மோட்ச நரகம் என்பனவற்றை மறுக்கும் தத்துவங்கள் அனைத்தையும் லோகாயதம் என்பது குறித்து நிற்கின்றது.

சார்வாகம், பிரகஸ்பதியம், பூதவாதம் நாத்திகம் போன்ற பெயர்கள் லோகாயதவாதத்தின் மறுபெயர்கள்.

காட்சிக்கு உட்படாத கடவுள் ஆன்மா, மோட்சம் கன்மம் போன்றவற்றை லோகாயதம் மறுத்தது.


மனித வாழ்விற்கு தேவையான தொழில்களையும் அவைசார் கடமை, ஒழுக்கம் நேர்மை போன்றவற்றையும் வலியுறுத்தியது.

கடவுள் வேதங்கள்,சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மறுத்தது.

லோகாயுதம் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தடைகளைத் தாண்டி எல்லாத் தத்துவங்களிலும் ஊடுருவி நின்று மக்கள் வாழ்வை வளம் பெறச்செய்தது.

உரையாடலின் போது, தேவர்களுக்குச் சமமாக அசுரர்கள் மேல்நிலை அடைந்துவிடக்கூடாது என்பதற்காகத் திட்டமிட்டு, தேவர்குலக் குரு பிகஸ்பதி உலகாயதவாதத்தை உருவாக்கி அதனை அசுரர்களுக்குத் போதித்தார் என்று இந்துப்புராணங்கள் கூறுகின்றன என்று ஹரிஷன் சுட்டிக்காட்டினார்.

"ஒரு புரட்சிகரத் தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்கவே முடியாது" - லெனின்




மூலம் : குறிப்பிடப்படவில்லை
(Shared in Facebook by –facebook.com/Zeitgeist.India )

## JVP அமைப்பினை விளங்கிக்கொள்ளல்

*27-10-2011* அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு
*(சி. கா. செந்திவேல்)*

* JVP இன் தோற்றம்
* அதன் கொள்கைகளும் நடைமுறைகளும்.
* 71 கிளர்ச்சி.
* பாராளுமன்றப் பாதைக்குச் சென்றமை.
* 87-89 கிளர்ச்சிகளும் அழிவும்.
* 94இன் பின்னரான மீள் உயிர்ப்பு.
* தேசியப்பிரச்சினை தொடர்பான யிக்ஷிறி யின் நிலைப்பாடுகள்.
* தற்போதைய நிலவரங்கள்.

## பாடிப்பறை

பாடிப்பறை [கவித்துறை நிகழ்வு]

**நவம்பர் 10, 2011 காலை 10 மணிக்கு (முழுமதி தினத்தில்)**

**சுபத்திரன் கவிதை - வைஷ்ணவி.**

**செ. யோகராஜா ஆய்வுரை : "ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்"**

**மொழிபெயர்ப்பு கவிதை - மார்க்ஸ் பிரபாகர்**

**கவிதை அரங்காற்றுகை - - சுதாகர்**
**கவியரங்கம்**

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**